பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 10 2026 12 40
ஞாயிற்றுக்கிழமை நண்பகல்
ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் ஜனநாயகம் உலகிலேயே மிகச் சிறந்தது என்று மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் தெரிவித்துள்ளார்.

2. ஐந்து சட்டப்பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைகிறது.

3. சுதந்திரப் போராட்ட தியாகிகள் சுப்பிரமணிய சிவா, கொடிகாத்த குமரன், Shyamji Krishna Varma ஆகியோருக்கு தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

4. ரஷ்யா-யுக்ரைன் இடையேயான பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான இந்தியாவின் பரிந்துரை மிகச் சிறந்தது என்று யுக்ரைன் தெரிவித்துள்ளது.

5. Sekhon இந்திய விமானப்படை மராத்தான் ஓட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><>

நாட்டின் ஜனநாயகம் வலுவாக உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் உலக அளவில் நமது ஜனநாயகம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது என்று கூறியுள்ளார்.

தேர்தலில் மக்களின் தீர்ப்புக்கு எதிராக காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் ஆணையத்தை குறைகூறி வருவதை அவர் கண்டித்துள்ளார்.

தேர்தலில் வெற்றிபெற்றால் தேர்தல் ஆணையம் சிறப்பாக செயல்பட்டதாக கூறும் காங்கிரஸ் கட்சி, தோல்வி அடைந்தால் தேர்தல் ஆணையத்தை குறை கூறுவதாக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சட்டத்திற்கு உட்பட்டு தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்படுவதாக திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் கூறியுள்ளார்.

<><><><>

ஐந்து சட்டப்பேரவை மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

தமிழகத்தின் மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளிலும், புதுச்சேரியின் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதியிலும், மேற்குவங்கத்தின் Rejinagar, Nandigram சட்டப்பேரவை தொகுதிகளிலும், அஸ்ஸாமின் Nagaon மக்களவைத் தொகுதியிலும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில், இன்று மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரை தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ ஒருங்கிணைக்கவோ நடத்தவோ கூடாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூகவலைதளங்கள் மூலம் தேர்தல் தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொள்ளக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 9ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

<><><><>

அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய திட்டங்களுக்கான விரிவான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு மாநில அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹைதராபாத் மாநகரம் Medchal, Malkajgiri மாநகரங்களுடன் இணைந்து வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தெலங்கானா மாநிலத்தின் 80 சதவீத வருவாய் ஹைதராபாத் மற்றும் சுற்றுவட்ட மாவட்டங்களில் இருந்து கிடைப்பதாக அவர் கூறினார்.

ஹைதரபாத்தில் மெட்ரோ மற்றும் Musi ஆற்றின் தூய்மைப்பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

தெலங்கான மாநிலத்திற்கு தேவையான மத்திய அரசின் நிதியுதவியை பெற்று தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

<><><><>

சுதந்திரப் போராட்ட தியாகி சுப்பிரமணிய சிவாவின் பிறந்த தினத்தையொட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், சுதந்திரத்திற்காக போராடிய சுப்பிரமணிய சிவா வந்தே மாதரம் பாடல் மூலம் மக்களிடையே நாட்டுப்பற்றை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.

டாக்டர். எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் விடுதலைக்காக சுப்பிரமணிய சிவா ஆற்றிய பணிகளை போற்றுவோம் என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மிகச்சிறந்த மேடை பேச்சாளரும், பத்திரிகையாளருமான தியாகி சுப்பிரமணிய சிவா, ஞானபானு இதழ் வழியாக சுதந்திரம் குறித்த கருத்துக்களை வெளியிட்டு வந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேச விடுதலைக்கு அவர் ஆற்றிய அரும் பணிகளை போற்றுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<><><><>

கொடிகாத்த குமரன் என்றழைக்கப்படும், சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரனின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

இது தொடர்பாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், நாட்டின் சுதந்திரத்திற்காக இளம் வயதிலேயே போராட்டத்தில் ஈடுபட்டவர் தியாகி திருப்பூர் குமரன் என்று குறிப்பிட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக தைரியத்துடன் போராடிய அவர், நாட்டுக்காக இன்னுயிர் ஈந்ததாக சுட்டிக்காட்டினார்.

டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், 1932 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்காக போராடி தியாகி திருப்பூர் குமரன் உயிர் நீத்தவர் என்று கூறினார்.

உயிர் பிரியும் தருவாயிலும் மூவர்ணக்கொடியை இறுக்கப்பிடித்தவர் தியாகி திருப்பூர் குமரன் என்று அவர் புகழாரம் சூட்டினார்.

ராஜாஜியால் தேசத்தின் பொதுச்சொத்து என்று அழைக்கப்பட்ட தியாகி திருப்பூர் குமரனின் தியாகங்களை நினைவு கூர்ந்து போற்றுவோம் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<><><><>

சுதந்திரப் போராட்ட வீரர் *Shyamji Krishna Varma* வின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தினர்.

இது தொடர்பாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் *Shyamji Krishna Varma* வின் தைரியமும், தியாகமும் இப்போதும் ஊக்கமளிப்பதாக கூறினார்.

திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், நாட்டின் சுதந்திரத்திற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் *Shyamji Krishna Varma* என்று புகழாரம் சூட்டினார்.

<><><><>

"மக்கள் நலனே தேசத்தின் நலன்" என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செயதுள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, நமது விமான நிலையங்களில் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று பெங்களூரு *Kempegowda* சர்வதேச விமான நிலையம் இடம் பெறுகிறது,

<u>*(வாய்ஸ் ஓவர் - Voice - 77 Sec.)*</u>

*(பெங்களூரு Kempegowda சர்வதேச விமான நிலையம், தற்போது உலக தரம் வாய்ந்த விமான நிலையமாக உருவெடுத்துள்ளது.*

*பல்வேறு நகரங்களுக்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கையாள்வதில் சிறந்த விமான நிலையமாக பெங்களூரு திகழ்கிறது.*

*சென்ற நிதியாண்டில் இந்த விமான நிலையத்திலிருந்து 4 கோடி பேர் பயணம் செய்துள்ளனர். இதில் 24 சதவீதம் பேர் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.*

*மேலும் இந்த காலகட்டத்தில், 2 லட்சத்து 80 ஆயிரம் விமானங்கள் இந்த விமான நிலையத்திலிருந்து பயணம் மேற்கொண்டுள்ளது.*

*இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு 5 லட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது.*

*நவீன சோதனை அறைகள், விமான போக்குவரத்து குறித்த டிஜிட்டல் தகவல் பலகை உள்ளிட்ட பயணிகளுக்கான வசதிகள் குறித்து சமூகவலைதளங்களில் பாராட்டப்படுகிறது.*

*பூங்கா நகரம் என்றழைக்கப்படும் பெங்களூரு மாநகரில் உள்ள இந்த விமான நிலையத்தின் பூங்கா வடிவிலான அலங்காரம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*பயணிகளின் வசதிகள், நவீன கட்டமைப்பு, கட்டிடக் கலை வடிவமைப்பு மற்றும் பாதுகாப்புடன் Kempegowda சர்வதேச விமான நிலையம் பெங்களூரு நகரத்தின் அழகை பிரதிபலிக்கிறது என்றால் அது மிகையல்ல).*

<><><><><><>

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான இந்தியாவின் பரிந்துரை மிகச்சிறந்தது என்று யுக்ரைன் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக யுக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் *Andrii Sybiha* வெளியிட்டுள்ள அறிக்கையில், கருங்கடல் வழியாக எண்ணெய் கப்பல் தடையின்றி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா, துருக்கி, எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் தங்கள் பரிந்துரைகளை முன்வைத்தன.

முன்னதாக ரஷ்யா - யுக்ரைன் இடையே போர் நிறுத்தத்தை அமல்படுத்த இந்தியாவின் முயற்சிகளை வரவேற்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

<><><><><><>

*Sekhon* இந்திய விமானப்படை மராத்தான் ஓட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்திய விமானப்படை தளபதி *Air Chief Marshal A.P. Singh* இந்த மராத்தான் போட்டியை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடங்கிவைத்தார்.

21 கிலோமீட்டர், 10 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர் ஆகிய மூன்று பிரிவுகளில் இப்போட்டி நடைபெற்றது.

1971 இந்தியா - பாகிஸ்தான் போரின் போது சிறப்பாக போராடிய இந்திய விமானப்படையின் *Flying Officer Nirmal Jit Singh Sekhon* நினைவாக இந்த மராத்தான் போட்டி நடைபெற்று வருகிறது.

<><><><><><>

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

ஜப்பான்னின் *Nagoya*-வில் உள்ள *Paloma Mizuho* விளையாட்டரங்கில் பிற்பகல் இரண்டரை மணிக்கு நிறைவு விழா நடைபெறுகிறது.

நிறைவு விழா அணிவகுப்பில், இந்தியா சார்பில் துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை *Neeru Dhanda* தேசியக்கொடியை ஏந்திச் செல்கிறார்.

<><><><><><>

இராணிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் *Rest Of India* அணிக்கு எதிராக 279 என்ற வெற்றி இலக்குடன் விளையாடி வரும் ஜம்மு-காஷ்மீர் அணி 3 விக்கெட் இழப்புக்கு 89 ரன் எடுத்துள்ளது.

<><><><><><>